**செ. கு. எண்:177** **நாள்: 14.11.2017**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு எடப்பாடி K. பழனிசாமி** அவர்களின்

அறிக்கை - 14.11.2017

மேட்டூர் அணையின் கிழக்கு மற்றும் மேற்குக் கரை வாய்க்கால்களிலிருந்து, எள் மற்றும் நிலக்கடலை சாகுபடிக்காக முதல் கட்டமாக தண்ணீர் திறந்து விடுமாறு விவசாய பெருமக்களிடமிருந்து எனக்கு கோரிக்கைகள் வந்துள்ளன. விவசாய பெருமக்களின் வேண்டுகோளை ஏற்று 17.11.2017 முதல் 13 நாட்களுக்கு தண்ணீர் திறந்து விடப்படும். இதைத் தவிர, மேலும் மூன்று கட்டங்களாகவும் பாசனத்திற்கு தண்ணீர் திறந்து விடப்படும். இதனால், மேட்டூர் அணையின் கிழக்குக் கரை வாய்க்கால் பாசனப் பகுதியில் **27,000 ஏக்கர்** நிலங்களும், மேற்குக் கரை வாய்க்கால் பாசனப் பகுதியில் **18,000 ஏக்கர்** நிலங்களும், ஆக மொத்தம், **45,000 ஏக்கர்** நிலங்கள் பாசன வசதி பெறும்.

விவசாயப் பெருமக்கள் நீரை சிக்கனமாக பயன்படுத்தி, நீர் மேலாண்மை மேற்கொண்டு உயர் மகசூல் பெற வேண்டுமாய் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

**K. பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு : – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9**